"கற்பகம்" ஆபீஸ்.

புதுவை.

ஐயா,

இன்று தங்கள் விலாசத்திற்கு எங்கள் மாத சஞ்சிகை ஒன்று அனுப்பி யிருக்கிறோம். தயவுசெய்து பெற்றுக்கொள்வதுடன், தங்களைப்போன்ற கற்றுணர்ந்த பரோபகார செல்வ சிகாமணிகளின் அன்பும், விஷபதானமும் மிகவும் வேண்டற் படுகின்றமையால், தயவு செய்து எங்கள் பத்திரிகையை ஆதரிப்பதுடன், விஷய தானமும் செய்துவரும்படியாய் தங்கள் மேலான கனத்தைக் கோருகின்றனம்.

மற்ற சகலமான விஷயங்களுக்கும் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு

சு. இராயல் ரெட்டியார்,

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

கற்பகம்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

KARPPAHAM.

தொகுதி IV] புதுவை, 1916 - ம் ஆ நவம்பர் மீ [பகுதி 1.

நம் நோக்கம்.

நெடிய கடல் சூழ்ந்த இந் நிலவுலகிற் றோன்றிய மக்களாயினோரெவரும் இகபர சுகானுபவங்களையடைய இன்றியமையாச் சாதனங்கள் தம் தம் தாய் பாஷையில் பொதிந்து கிடக்கின்றன வென்பதையறிந்து தாய் பாஷையை விருத்திசெய்து அதனால் பயனடைந்தனர். அவ்விதமே நாமும் நமது சுயபாஷையாகிற தமிழைமுற்காலந் தொட்டு விருத்திசெய்து வந்தனராயினும் சென்ற ஐம்பது வருஷகாலமாய் மேற்கத்திய கல்வித் துறையில் நாம் இறங்கிவிடவே தமிழ் பாஷையின் விருத்தி குறையலாயிற்று. இனிமேலும் அப்படியே நாம் நமது கவனஞ் செலுத்தாமல் கொஞ்சகாலம் இருப்போமாகில் நம் தமிழ்பாஷை இருந்த இடம் தெரியாமலே மறைந்துபோகும். தாய் பாஷையாகிற நம் தமிழ் அபிவிருத்தி யடையவேண்டி பல பண்டித வித்வத் சிரோன்மணிகள் உலகவியல்களை பத்திரிகைகள் மூலமாய்ப் பரவச் செய்து உயர்ந்த நடையில் வெளியிடுகின்றனராயினும் அவை உயர்தர கல்விமான்களுக்கன்றி ஏனையோருக்கு (பெரும்பான்மையான தாழ்ந்த படிப்புள்ளவர்களுக்கு) பயன் தாராதா[illegible]லாலும்; அதிக சந்தா கொடுத்து பத்திரிகைகளை வாங்கி வாசிப்பவர்கள் சொற்பமாயும் ஏழைகளே அதிகமாயிருப்பதால் குறைந்த சந்தாவாகவும் ஏற்படுத்தி இனிய செந்தமிழ் நடையில் தெளிவாய் சென்ற மூன்று வருடமாய் நாம் அனுபவித்த கஷ்ட கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் மீண்டும் "கற்பகம்" என நாமமிட்டு வெளியிட முன்வந்துள்ளோம்.

"கற்பகம்" என்பது தேவலோகத்திலுள்ள ஒரு விருக்ஷமாயினும் அது தன்னை யண்டிநோர்க்கெல்லாம் கேட்பதைத் தருவது போன்று, இப் பத்திரிகையும் தன் பெயருக்கேற்ப பொது ஜனங்களின் கோரிக்கைகளை யெல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டு பலருக்கும் பயன் தரும்படியான விதமாய் வெளியாகுமென்பதே. யுத்த காரணமாய் ஏற்பட்டுள்ள காகித பஞ்சத்தையும் கவனியாது விஷயங்களை அதிகமாக்கி ஏழைகள் முதல் தனவந்தர்வரையில் யாவரும் வாங்கி வாசித்து பயனடையும்படியாயும் தாய்பாஷையை விருத்தி செய்யும் படிக்கும் வெளியிடலானோம்.

பத்திரிகை செவ்வனே நடைபெறுவது கையொப்ப நேயர்களைப் பொறுத்ததாயிருப்பதால் இச் சஞ்சிகையைப் பெறும் ஒவ்வொரு நற்சிலரும் தங்கள் தங்களாலியன்றமட்டும் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுநல பரோபகார செல்வ சிகாமணிகள் பலரும் நமது பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு அதன் அபிவிருத்தியைக் கோரி பொருளுதவி செய்து நமது முயற்சியைத் தளரவிடாது செய்ய முன் வருவார்களென்றே நம்புகின்றோம்.

நமது பத்திரிகை என்றும் நீடித்து நடைபெற்று வரும்படியாய் கருணாகரக் கடவுளின் அன்பை என்றும் வேண்டுகின்றனம்.

ஜப்பானும் இந்தியாவும்.

தற்காலத்தில் ஜப்பான் கைத்தொழிலில் விருத்தியடைந்து மற்றெல்லா நாடுகளிலும் முதன்மையாயிருப்பதின் காரணங்களை கவனிக்கில் கைத்தொழிலில் ஜப்பான் கவர்ன்மெண்டார் உதவும் உதவியே காரணமாகும். தொழில்களுக்கு வேண்டிய வசதியுள்ள விடங்களில் கவர்ன்மெண்டார் தங்கள் சொந்த செலவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி ஜனங்களை தொழிலில் பழக்கி வந்தார்கள். ஜனங்கள் தொழிலில் பழகி எங்கும் பரவிவரவே கவர்ன்மெண்டார்

ஜனங்களுக்கு தொழில் நிர்மானம் செய்யவேண்டியசாமான்களையும், முதலையும் சொற்ப வட்டிக்குக் கொடுத்து ஜனங்களுக்கு ஊக்கமுண்டாக்கினர். இது காரணமாய் நாடெங்கும் கைத்தொழில் விருத்தியாகி மேனாட்டு முறைகளின்படி சகலவித சாமான்களையும் உற்பத்தி செய்ய வாரம்பித்தனர். 1880–ம் வருஷம் கவர்ன்மெண்டு மாதிரிச் சாலைகளை ஜனங்களுக்கே விற்று விட்டார்கள். தேச அபிவிருத்திக்காக இருப்புப் பாதைகளும் மின்சாரங்களும், விவசாயம் வியாபாரச் சட்டம், முதலான வசதிகளை முதலில் அன்னியநாட்டாரைக் கொண்டே விருத்தியடையச் செய்தனர். ஸ்திரீகளை வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்கச் சிறிய தொழில்களைப் பயிற்றுவித்தனர். 1896-ம் வருஷத்தில் டோகியோவில் ஒரு கைத்தொழில் பொருட்காட்சி சாலை அமைத்து 65000 மாதிரிப் பொருள்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. கைத்தொழில், விவசாயம், வியாபாரக் கூட்டுறவு முதலானதுகளை இக் காக்ஷி சாலையில் வேண்டுவோருக்கு தெரியச்செய்யப்படுகிறது. நம் பாரதநாட்டிலோ தற்காலம் வியாபாரம் அதிகமாய் நடந்தபோதிலும் இந்திய கைத்தொழில் விருத்தியடையச் செய்யாமையால் ஏராளமான பொருள் அயல்நாடுகளுக்குச் செல்கின்றன. யுத்தம் ஆரம்பமான பிறகுதான் கைத்தொழில்களையும் செயற்கைப் பொருள்களையும் வேண்டியவாறு செய்துகொண்டு இந்தியாவிலேயே அவற்றை உபயோகப்படுத்திக்கொள்ள கணக்கற்ற ஜனங்கள் எண்ணினபோதிலும் ஜப்பான் கவர்ன்மெண்டைப்போல் இந்திய கவர்ன்மெண்டாரும் ஜனங்களின் விருப்பங்களை நிறைவேற்ற முன்வருவது நலம். அத்துடன் ஜன ஒற்றுமைவேண்டும் ஒற்றுமையின்றி கவர்ன்மெண்டார் உதவி மாத்திரம் இருந்தபோதிலும் தொழில் விருத்தியடையாது. ஐப்பது வருஷங்களுக்கு முன் இந்தியாவைவிட ஜப்பான் தாழ்ந்த நிலைமையிலிருந்தது. தற்போது ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைக்கவே உன்னத நிலைமையடைந்தது அதுபோல் இந்தியர்களும் இந்திய கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைத்து பொருளாதார நிலைமையை விருத்திசெய்யவேண்டும். இந்தியாவின் அபிவிருத்தி இந்தியர்களுக்கு மாத்திரமன்றி இந்திய கவர்ன்மெண்டாருக்கும் ஆதாயமென்பதையும் உணரவேண்டும்.

நாம் முன்னுக்கு வருவதெப்படி?

நம் ஜன சமூகத்தில் ஜாதிக் கட்டுப்பாடு என்ற ஒரு கொடுந் துஷ்டன் நம் அபிவிருத்தியைத் தடைப்படுத்துவதுடன் நாம் செல்ல வேண்டிய மேலான பதவிக்கு முற்றும் இடையூறாயிருக்கிறது. நமக்குள் இந்த ஜாதி வித்தியாசமும் கட்டுப்பாடும் இல்லாதிருக்குமானால் நாம் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கலாம். பிறவி தோஷத்தால் நாம் நமக்குள்ளே தாழ்ந்தவர்களென்று எண்ணும் எண்ணம் நமக்குள் இருந்துவரும் வரையில் நாம் கடைத்தேறுவது கஷ்டம். நமக்குள் ஜாதி வித்தியாசத்தை அடியோடு நீக்கி எல்லாரும் சமமான நிலைமைக்கு வரவிடினும் அவரவர்கள் முயற்சியாலும் சாதுர்யத்தாலும் உன்னத பதவியையடையும் நிலைமைக்காவது வரவேண்டுவது அவசியம். இப்போது நமக்குள் இருந்துவரும் ஜாதிக்கட்டுப்பாடு மிகவும் கொடூரமும், அநியாயமுமானது. இதுவே நமது கௌரவத்தையும், செல்வாக்கையும் குறைக்கக்கூடியதாகிறது. பிறவி தோஷத்தினால் மாத்திரம் தாழ்ந்தவரென்று முன்னுக்குவராமல் தடுப்பது நியாயமாகுமா? தற்காலம் நாம் தாழ்ந்தவரென்று நினைக்கும்பலரும் முன்னுக்கு வரவேண்டியே நம் இந்துமதத்தை விட்டுவிலகி அந்நிய மதத்தைத் தழுவுகின்றனர். அவ்வித நிலைமையிலிருக்க இப்போது நாம் நமக்குள்ளிருக்கும் ஜாதிக் கட்டுப்பாட்டை ஒருவிதமாய் நீக்கி தாழ்ந்த வகுப்பினரை தாழ்மையாக்கும் அம்சங்களையும், தொடுவதற்கும் அருகரன்று என்ற இழிவான எண்ணத்தையும் நீக்கவேண்டும். நாம் கல்யாணம் செல்வம், ஆயுள், முதலியதுகளைக் கைக்கொண்டொழுகுவது இந்திரிய ஆநந்தத்திற்காகவேயன்றி மோக்ஷ சாதனத்தையடையவல்ல. நாம் இந்துக்கள். மூதறிவுடைய பிக்ஷாதிகாரி முதல் லக்ஷாதிகாரிவரையிலும், உயர்குல பிராமணன் முதல் தாழ்குல பறையன்வரையிலும் ஹிந்துவானால் எல்லாம் சமமென்று நினைக்கவேண்டும்.

கடவுளிடம் வித்தியாசமுண்டா? இல்லையே! ஆகையால் நாம் நமக்குள்ளிருக்கும் ஜாதிக்கட்டுப்பாட்டையொழித்து எல்லாம் சமம் என்பதையுணர்ந்து நடக்கவேண்டும். அப்போதுதான் நாம் முன்னுக்கு வர ஏதுவாகும்.

விசித்திர விநோத விகட சிண்டாமணி.

1 சித்த நித்த மெண்ணி யுன்னை
நிற்கு மென்னை விட்டிடா
தித்தி னத்தி லிச்ச கத்து
திக்க மெத்த வைத்ததே
னத்த பத்தி கண்டு மிங்கெ
னப்ப னுன்னை யொட்டவே
சித்தி வித்து சிட்டு மென்ன
செய்த திந்த புத்தியே.

2 காத மோடிய கன்னியர்க்கோர்மறை
வாத பித்து வைத்தவர்க் கோர்மறை
பேத மென் றும் பேசுவோர்க் கோர்மறை
மாத மூன்று மறையெனப் பொய்யுமே.

3 திண்டுக ளிருந்திடின் தேறுமே சோம்பலும்
சுண்டுக ளிருந்திடிற் சுகமாயளந்திடும்
நண்டுக ளிருந்திடின் நரியுமே நாட்டமால்
தண்டுக ளிருந்திடின் தரையினிற் சண்டையே.

4 இலையெலாம் போட்டாளே னு
மெடுத்து சுத்திசெய் தாளேனும்
உலையதை வைத்தா ளேனு
முருசி பண்டங் கொண்டா ளேனும்
வலையிலுந் தன் கணவன்
வந்தடையப் பணித்தா ளேனும்
முலையதை மூடி நில்லாள்
முகத்திலும் விழிக் கொணுதே.

5 வாத்தியம் வாசிப்பா ளேனும்
வாகொடு பாடுவா ளேனும்
சாத்திரம் படிப்பா ளேனும்
சங்கதி யுரைப்பா ளேனும்

பாத்தியம் பொறுத்து மெல்லப்
    பழைபகை யுண்பா னேனும்
நாத்தியின் சொற் கேளாதானை
    நமனென் றுரைக்க லாமே.

6 முன்னம் இழுத்தநடை மூதுகும் வளைந்துவா
    மூக்கும் பெருத்த தையல்
கன்னம் சுருங்கியவை காதும் அடைத்தநற்
    கண்ணும் மழுங்கி வொளியே
இன்னற் பெருத்தபிணி யெக்கும் நிறைந்துவுடல்
    ஏற்றத்தின் சானு மென்ன
வன்னம் பலத்துலகு மின்னுங் களிகசநித
    மஞ்சள் மினுச்கி யிவளே.

7 வெள்ளைக் காக்கைப் பறந்த தென்று
    விளம்பி னுலதை நம்பலாம்
வெண்ணெ யுருகக் கிண்ணமாமென
    விண்டா லதை நம்பலாம்
தொள்ளைக் காது தொந்திக் தொப்பைக்கு
    துணியு மில்லை நம்பலாம்
துஷ்டனெனக் கிஷ்ட னனுந்
    தொடரும் பதம் நம்பலாம்
கொள்ளைத் தின்று குதிரை பெருத்தது
    கொண்டாலதை நம்பலாம்
குருடன் விழிகள் தெரிந்த தென்றுற்
    கோனும் வேண்டாம் நம்பலாம்
பிள்ளை யென்றே பேசி மெத்தப்
    பிரட்டு செய்யுந் தந்தையைப்
பின்னெனுது மெய் முன்னெனுது பொய்
    பின்னெனுது சொல் நம்புமே.

8 சள்ளையே மிகுதி யானுற்
    சாத்திர மெல்லா மோடும்
கொள்ளையு மளித்துக் தின்றுற்
    குசுவது வந்தே தீரும்

கள்ளியாம் மனைவி கொண்டாற்
கணவனு மடங்க வேண்டும்
பள்ளியே பலக்க வென்றாற்
பயல்களை யடிக் கொணாதே.

9 தீபத்துக் குதவாத் தைலம்
திரும்பவு முதவாப் பிடரி
தூபத்துக் குதவா வாசம்
தூரத்தவு மறியாப் பட்டி
சாபத்துக் குதவா வாக்கு
சங்கத்துக் குதவா மெம்பர்
பாபத்தை நீக்காக் கடவுள்
பயனில்லை யேழுந் தானே.

10 பணமது வந்த தென்றும்
பாரிவந் தாளே யென்றும்
மணமது கொண்ட மென்றும்
மாநிமே கண்ட மென்றும்
குணமது மெய்த தென்றுங்
கூனனும் நிமிர்ந்த தென்றும்
கணமதும் நினைக்க லாமோ
காலனு மிருக்க மேலே.

11 சித்தத்தி லுத்தமமாஞ் சீரான செகதீசன்
சத்தத்து நத்துவோர் சயிப்பாரோ—முத்தொத்து
வித்தைவி வேகமும் விரிவாம் பலவும்
தத்தையி தாகத்தத் தா.

12 தினையொத்த பத்தி தினமும் முகந்து
செயவே களிக்க வருவா
யுனைமெத்த நத்தி யுலகுந் தெரிந்து
முறவே பலத்த தகனுற்

சினையுள்ளி ருக்குஞ் செயலுங் கனிந்து
சிவமே யெடுத்து தாவே
மனைசக்தி வித்தை மகிழ்வும் விரைந்து
வளமே யளிக்கப் பதமே.
13 குருவா யுனையே சொளலா வினிநீ
வருவா யெதிரே வகையா வினிதே
தருவா யெனவா தயவா விதமே
உருவா முனையே துதியே நிதமே.
14 கொடி யொன்று வாடிக் குனிந்தே திரும்பிக்
குணமாக வென்னை தொடவே
மடி வந்து கொஞ்சி மயில்போ லுமாடி
மதில் மேலு மேறக் களிவாய்
பிடி யென்று கந்து பெரிதே யெடுத்து
பிறகே விடுத்த விதமே
வடி யிந்த விந்தை வாவே களித்து
வருமா லெனக்கு நிதியே.

இவ்வாறு, வினோத சிந்தாமணி, தன் ஒளியைக் கிளப்பவே, அங்கு அநேகர் கூடினார்கள். ஆயினு மவ்வீட்டெஜமானன், மறுபடியும், இதன் நாதத்தை, போஜனஞ் செய்து கூட்டவேண்டுமெனக் கேட்டுக்கொண்டபடி, ப்ரொக்ராம் மாலை மூன்று மணிக்கரேஞ்சு செய்யப் பெற்றது. புலவருடன் போஜனமவ்வீட்டிலேயே நடத்தி, மாலைக் காலத்தை கவனித்திருக்கையில், மணி மூன்றடிக்க, வினோத சிந்தாமணியும் ஒலிக்கலாயிற்று.

வினோத சிந்தாமணி.

15 ஸதாசிவம் ஸதாசிவம் ஸதாசிவம் என்றும்
நிதானமும் மிதேசுகம் நிலாவிலும் சங்கும்
பதாபதம் பலேயெனப் பலேபலே பக்கும்
இதாயிதம் பெறாமிதம் பதேவிதம் நன்றே

ஸதாசிவம் வருமிதம் பதேநிதம் கொண்டும்
விதாயமும் மறீபவன் விநாயன் முந்தும்
எதாகிலுந் தாரதலங் கெணீரெனு மென்றும்
பதாபதம் பெறாமிதம் பதேளிதம் வென்றே.

16 வேடிக்கை யாகவே ஜோடித்துச் சொல்லுவேன்
விந்தையை வந்து கேளும்
வாடிக்கை யாமிதே கேடித்திரி யாமலும்
வண்டமுந் தந்து ஆளும்
கோடிக் கணக்காகக் கோயிலின் கோபுரம்
கும்பிட வாயிற்று சீரும்
நாடித்து ணைக்காகப் பாடிச் சதாசிவம்
கும்பிட லாயிற்று பாரும்.

17 உமையவ ளுடலினிற் பங்கே
உரிமையு முடையவள் கங்கே
சுமையவள் சிரமதில் நங்கே
சுடமழு மரையொடு சங்கே.
பணிகளை யுடையவ னென்றே
பலவித பிணிகளை வென்றே
மணிகளை யிணையணி நன்றே
மனமினி களியெனக் கின்றே.

18 பாரும் பாரு மெந்தனையா-நிதம்
பதமொடு பலமண மையா
சேருஞ் சீருமெந்தனையா—ளிதம்
நிசமிது கனவிலும் மெய்யா.

19 சிவசிவ சிவவுனை மறவேன் நான்
சீக்கிர முனதரு ளளிவாநீ
தவமுனி பலருனைத் தொழவே தாள்
தயவுனக் கிருக்கென வெகுவாலே
கவலையு மெனக்கினி கயிலாயா
கணமது மிலையெனக் களியாமே
நவவழிப் பொருளிதை விடையேறி
நலமெனக் கீந்தது மறிவோமே.

(இன்னும் வரும்.)

ஸ்திரீகளின் துயரம்.

இவ் வுலகில் மானிட ஜன்மம் எடுத்தல் மிகவும் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு ஊமையின்றிப் பிறத்தல் அதிலும் கஷ்டம். அவ்விதம் பிறந்தும் பெற்றோர்கள் தங்கள் அறியாமையாலோ; பகுத்தறியும் சக்தியின்மையாலோ, பணத்தாசையாலோ தங்களை குழந்தைகளுக்கு அதி பால்யத்திலேயே விவாகம் செய்து விடுகின்றனர். பால்யத்தில் சிறுவர்சிறுமிகளை காமக்குரோதாதி அஸூயைகளுக்கு உட்படுத்தி தற்காலம் சந்தோஷத்தைப் பெற நினைப்பது பெற்றோரின் பெரும்பாதகமே! புருஷருக்குள்ள ஸ்வதந்திரம் மாத்திரம் ஸ்திரீகளுக்கு ஏன் கொடுக்கக்கூடாது; அது விஷயத்தில் பக்ஷபாதம் ஏற்படுத்துவது நாகரீகமடைந்த நமக்குத் தகுமோ? நாம் யாவரும் சமமென்பதைமட்டும் புருஷர்கள் ஏன் கருதவில்லையோ? இவ்விதம் கருதாததால் மற்றவர்கள் நம்மை நாகரீகம் அறியாத மூடர்களென்றல்லவோ மதிக்க இடமுண்டாகிறது. தம் பெண்களை பெருமைக்காக குணமறியாதவனுக்கு விவாகம் செய்து கொடுப்பதும், அதனால் அவள் துன்பத்திற்காளாவதும் இவ்விதம் செய்வதால் பெற்றோராகிலும், பிள்ளைகளாகிலும் அடைந்த சுகம் யாது? தம் பிள்ளைகளுக்கு யுக்த வயது வந்து அறிவு முதிர்ந்து ஞானத்தைப் பெற்று தங்கள் தங்களுக்கான விவேகமுள்ள ஸ்திரீ புருஷர்கள் கிடைத்தால் அப்போது இருவரும் மனமொத்து இருவருமாய் சேர்ந்து விவாகம் செய்துக்கொள்ளலாமன்றோ? பால் விவாகஞ் செய்து அதனால் விதவையாகும் ஸ்திரீகளை நம் நாட்டில் நடத்தும் கொடுமையோ விதவையானால் மங்கள காரியங்களில் பிரவேசியாமலும், ரஸமான பாகங்களை உண்ணாமலும், சுபாசுப காரியங்களில் ஸ்வஜனங்களுடன் கூடி சுகமனுபவியாமலும், வெளியில் செல்லாமலும், சிறை வாசம்போல் காலம் கழிக்கவேண்டியிருக்கிறது. பால்ய விவாகமே ஸ்திரீகளுக்கு ஒரு பந்தம். பால்ய விவாகமில்லாமல் வைராக்கியத்துடன் காலங் கழிப்பதேமேல். ஈசனால் அருளப்பட்ட இச் சரீரத்தை சதா அவருடைய சேவா, ஸ்துதியில் உபயோகித்து முக்திமார்க்கத்தையறிந்து முக்தியடைய பாடுபடவேண்டும். முக்தியடைய கல்யாணம் பெருந் தடையாகிறது அல்லது ஸ்திரீகளுக்கு புருஷர்களைப்போல் சகல உரிமைகளையும் தந்து அவர்களை இல்லறமார்க்கத்தினின்று முக்தியடையும் வழியைத் தேடவேண்டும். இது விஷயத்தில் கல்விமான்களும் கவர்ன்மெண்டாரும் பூரண கிருபை வைத்து ஸ்திரீகளின் துயரத்தை நீக்க வழிதேடுவார்களென்றே நம்புகின்றனன். கடவுள் அருள் புரிவாராக.

ஸ்திரீ ரத்னம்.

மனோ சக்தியின் மகத்துவம்.

"உன் மனது வெளியில் சஞ்சரிக்கும்பொழுது அதை பரமார்த்தமானவைகளில் திருப்பி நிலையாக நிறுத்து."

பரமார்த்தமான வஸ்துக்களை நாட ஆரம்பிக்கையில் மனதை அடக்கி ஆளுவதே அப்பியாசிகளுக்கு முதன் முதல் தோன்றும் கஷ்டமான சாதனங்களில் ஒன்று. அப்பியாசிகளே இதன் சிரமத்தை நன்கு உணர்வார்கள். நம் சித்த விருத்திகளை அடக்கியாள எத்தனிக்கையில்தான் நம் மனது எவ்விதம் அடக்கியாளப்படாத நிலைமையிலிருந்த தென்பதை நாம் நன்கு அறிகிறோம். அந் நிலையில்தான் மனம் அலங்கோலமாகி எவ்வித எண்ணங்களுக்கும் இடங்கொடுத்ததையும் அறிகிறோம். ஆகையால் இவ்விதம் ஆராய்ச்சி செய்கையில் நாம் காண்பது யாதெனில் நம் மனதை பயனற்ற வழியில் சதாகாலமும் செலுத்தி வீணாக்கிவிட்டதை உணர்கிறோம். ஆனால் அதை சரியான வழியில் உபயோகித்திருந்தால், இதற்குள் நம் மனதை நாமே யடக்கி உத்தம ஜீவியத்தையும், சுத்த ஹிருதயத்தையும் மனோ வசிய சக்தியையும் பெற்று நம் ஆத்மாவை அபிவிர்த்தி செய்திருக்கலாம். இவ் வுண்மையின் அருமையை ஒருவன் எப்பொழுது அறிகிறானோ அப்பொழுதே அவன் ஜன்ம சாபல்ய மடைகிறான்.

முதன் முதல் மனது நாம் கோரியப் பிரகாரம் நமக்கு வசப்படுகிறதில்லை; ஆகையால் சித்த விருத்திகளை ஒரு வழிப்படுத்த பொறுமையும், விடாமுயற்சியும் அவசியம். தவிரவும் அப்பியாசிகள் அடிக்கடி சிறிதுகாலம் முயற்சியில் அதைரியமடைந்து தாம் எடுத்த காரியத்தை அரை குறையாய் கைவிடக்கூடும். அவ்விதம் செய்வது உசிதமல்ல. இம் முயற்சிக்கு பொறுமை அத்யாவசியம். இவ் வப்பியாசங்கள் சிறிது கஷ்டமாகத்தான் தோன்றும். இதைவிட்டு விடலாமென்றும் எண்ணம் உண்டாகும். அவ்விதம் செய்தால் நீ கோரிய காரியம் சித்திக்காது; ஆகையால் அப்பியாசங்களை படிப் படியாகப் பழகு. ஏகாக்கிரக சித்தநிலையடைய விரும்பின் அதற்காக ஏக காலத்தில் பெரு முயற்சியெடுத்து உன் தேகத்தையும், மனதையும், பலஹீனத்திற்குள்ளாக்காதே. தன் மனோ சக்திகளின் மகிமையை நன்கு அறிந்தவனே உலகத்தில் உத்தம புருஷன்.

காலை, மாலை உனக்கு சௌகரியமான நேரம் ஒன்றை குறிப்பிட்டு தியானம் செய் முதன் மூதல் 10 நிமிஷம்வரை உன் மனதை தியானத்தில் நிறுத்து பிறகு 20 நிமிஷம், இவ்விதமே தியான காலத்தை நாளாரப்பமாக அதிகரித்து நீ கோரிய காரியத்தில் நிலை நிறுத்தப் பழகு. உதாரணமாக ஜீவகாருண்யம் (தெய்வீகத்தன்மை) ஒன்றை நீ தியானிப்பதாக நினைத்துக்கொள். அதன் அம்சங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து, அவைகளைப்பற்றி யிட்டும் சிந்தனை செய்துகொண்டிரு. இப்படி தியானம் செய்துகொண்டு இருக்கையிலேயே உன் எண்ணங்கள் அங்குமிங்கும் கலைந்தோடத் தொடங்கும். ஆகையால் மனம்போன போக்கிலே அவைகளைத் திரியவிடாமல், அடிக்கடி நீ தியானிக்கும் விஷயத்தின்மேலே உன் முழு சித்தத்தையும் நிலைநிறுத்து.

இவ்விதமே மறுநாள் வேறு ஒரு ஜீவிய குணத்தின் தன்மைகளைப் பற்றி தியானம் செய். மானிட வாழ்க்கைக்கு அதன் உபயோகங்கள் யாவை; அது மானிட ஜீவியத்திற்கு எவ்விதம் சம்பந்தப்பட்டவை யென்று இவைகளை ஆராய்ந்து பார்.

நீ எவ்வளவுக் கெவ்வளவு அத்தன்மைகளின் குணநிசயங்களை பூரணமாக அறிந்து உணர்ந்து அவைகளை உன் மனதில் பதிய வைக்கிறாயோ அதற்குத் தக்கவாறு அவ்வுணர்ச்சிகள் உன்மேலிட்டு உன் ஜீவியத்தில் அதற்குறிய குணங்கள் பிரகாசிப்பதைக்காண்பாய்.

டாக்டர் K. T. ராமஸ்வாமி.

வீட்டிற்குள் வைத்த வஸ்துக்களை வைத்த இடந்தெரியாது மறந்தவன் நூறுண்டு தக்கித்தாலும் முன்வைத்த இடத்தை ஞாபகஞ் செய்து அறிந்தபின் அவைகள் கிடைப்பதுபோல்; நிர்மலமான ஆத்மஞானமும் ஸம்சார துக்கத்திற்குக் காரணமாகிய அறியாமையைப் போக்கும். தனது அறிவினால் தெரிசிக்கப்படாமல் கனமான கன்மங்களை அநேகயுகஞ் செய்தாலும் காணப்படாது.

(கைவல்லியம்.)

ஸ்வாமி விவேகானந்தரின் எதிரொலிகள்.

[ஸ்ரீமான் எம்-ஸி-நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது.]

மகான் ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுடைய பாதாரவிந்தங்களில் சில நாட்களாவது உட்கார்ந்து, நமது மதம், தேசசரித்திரம் ஜனசமூக நடையுடை பாவனைகள் முதலியவற்றிற்கும் மேனாட்டாருடைய மதம், தேசசரித்திரம் முதலியவற்றிற்கும் உள்ள தாரதம்மியத்தைப்பற்றி அவருடைய அற்புதமான போதனைகளைக்கேட்கப் பெற்ற சிலர் இந்த ஜீவிதகாலத்தில் பாக்கியவான்கள் தாம். சென்னையில் ஸான்தோ முக்கு அருகில் கடற்கரையில், கீழே நீல நிறமான கடலையும் மேலே இன்னும் நீலநிறமான ஆகாயத்தையும் உடைய அகன்ற வெளியை நோக்கிக் கட்டப்பட்டு அப்பொழுது உதவித் தலைமைக் கணக்கதிகாரி (அஸிஸ்டண்ட் அக்கௌண்டண்ட் ஜெனரல்) யாயிருந்த ஸ்ரீமான் பட்டாச்சார்யாரவர்களால் வசிக்கப்பெற்றிருந்த பங்களாவில் ஸ்வாமிகளும் ஸ்வாமிகளின் எண்ணற்ற ஸ்நேகிதர்களும் கல்லூரி மாணவர்களும் கூடிச் சம்பாஷித்த, அமைதியான, உற்சாகம் ஆனால் நிறைந்த தான கூட்டங்களை உண்மையாக மறந்துவிட முடியாது. 1892 வருஷம் மார்சு மாதத்திலோ, ஏப்ரல் மாதத்திலோ ஒருநாள் மாலையில் வெட்டவெளியில் கூடிய அக் கூட்டங்களில் ஒன்றில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது:—"ஸ்வாமிகளே, ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நீல நிறத்தை ஏன் கற்பித்திருக்கிறார்கள்?" எதிரிலிருந்த பெருக்க தண்ணீர்ப் பரப்பை வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்வாமிகள் திடீரென்று திரும்பி, "ஏனென்றால் நீல நிறம்தான் அகண்டத்தைக் குறிக்கும் நிறம். உன்பக்கத்திலுள்ள இடத்தைப் பார்; அது நிறமற்றிருக்கிறது. ஆனால் மேலேயுள்ள அகண்ட ஆகாயத்தைப் பார், அது நீலநிறமாயிருக்கிறது. கடலிலிருந்து ஒரு கையளவு ஜலம் எடுத்துப்பார்; அது நிறமற்றிருக்கிறது. ஆனால் இக் கடலைப்பார்; நீலநிறமாயிருக்கிறது. உன்னைச் சுற்றியுள்ள மண்ணைப்பார்; அது ஏதோ ஒரு நிறமாயிருக்கிறது. ஆனால் தூரத்திலுள்ள பெரிய பர்வதம் நீலநிறமாகத்தோன்றுகிறது. ஆதலால் தான் சர்வ வியாபகமாயும் சகல வஸ்துக்களிடத்தி

னும் அந்தர்க்கதமாயும் இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நீலநிறம் கற்பிக்கப்பட்டிருக்கின்றது; அவர் அகண்டத்திற்கு அறிகுறியாவர்" என்று பதில் கூறினார். ஸ்வாமிகளுடைய வார்த்தைகளை அப்படியே இங்குக்கூறுவது முடியாது; ஆனால் அன்று மாலை அவர் கூறியதின் கருத்து இதுதான்.

பின்னர் கீழ்நாட்டினும் மேனாட்டினும் உள்ள தத்துவ சாஸ்திரிகளைப் பற்றிச் சம்பாஷணை யாரம்பித்தது; ஸ்பென்ஸர் என்னும் மேனாட்டுப் பெரியோருடைய தத்துவசாஸ்திரத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசினோர் பலர். ஸ்பென்ஸருடைய தத்துவ சாஸ்திர சாமர்த்தியத்தைப் பற்றி யுண்டான புகழ்ச்சியைத் தாமும் ஒப்புக்கொண்டது மன்றியில், ஸ்வாமிகள் "ஸ்பென்ஸருடைய அறிய முடியாதது என்பது என்ன? நமது மாயைதான்" என்றார். ஆனால் ஸ்வாமிகள் சட்டென்று திரும்பிவிட்டார். 'இந்த மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் அறிய முடியாததைப் பற்றிப் பயப்படுகிறார்கள்; ஆனால் நமது தத்துவ சாஸ்திரிகளோ அறியாததில் ஒரேயடியாகக் குதித்து அதை ஜெயித்து விட்டார்கள். மேனாட்டுத் தத்துவ சாஸ்திரத்தின் பெரும் பேச்சிக்கும் கீழ்நாட்டு அநுபவத்திற்கும் இதுதான் வித்தியாசம் உங்களுடைய மேனாட்டுத் தத்துவசாஸ்திரிகள் ஆகாயத்தில் எவ்வளவு உயரப் பறக்க முயன்றும் தங்களுடைய கண்களைக் கீழேயுள்ள பிணத்தின்மீதே செலுத்தும் கழுகுகளைப் போன்றவர்கள். அறிய முடியாததைக் கடப்பதற்கு அவர்களால் முடியாது; ஆகையால் அவர்கள் பின் வாங்குகிறார்கள்; சர்வ சக்தி வாய்ந்ததாகச் சொல்லப்படும் பொன்னைப் பூஜிப்பதினின்றும் விடுபட்டிருக்க அவர்களால் ஒருபொழுதும் முடியாது. சர்வசங்க பரித்தியாகத்தின் உண்மைச் சக்தி மேனாட்டு ஜனசமூகங்கட்கு விளங்காது. அநேகர் தியாகம் செய்கிறார்கள் என்பது உண்மையே; அநேகர் தன்னலத்தை அபரிமிதமாக மறுக்கிறார்கள் என்பது உண்மையே; ஆனால் அவர்கள் தியாகம் செய்தபொழுதும் தன்னத்தை வெறுத்தபொழுதும் இன்னும் அதி நுட்பமான, மகத்தான சக்திகளையடைந்து பூஜையையும் புகழ்ச்சியையும் பெறுதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். அடியோடு அகம் அழிந்த தன்மை நம்முடைய சில மகாத்மாக்களுடைய ஜீவிதத்தில் தான் காணப்படலாம். அநே

கர் உலக அதிகாரங்களை விட்டுவிடுகிறார்கள் என்பது உண்மைதான் ஆனால் சூட்சும சக்திகளையும் சித்திகளையும் அடைவதற்காகவே இப்படிச் செய்கிறார்கள்''

''அப்படியாயின், ஹிந்துமதத்தின் முக்கியக் கொள்கைகள் தாம் எவை?'' என்று கல்லூரிப் பண்டிதர்களில் ஒருவர் கேட்கவே, ஸ்வாமிகள் சட்டென்று, ''ஹிந்து மதத்தின் மூன்று முக்கிய கொள்கைகளாவன. (1) ஈச்வரன் ஒருவன் உளன் என்பதில் நம்பிக்கை (2) வேதங்கள் ஈச்வர வாக்கியங்களே என்ற நம்பிக்கை (3) கர்ம நியதியிலும் புநர் ஜன்மக் கொள்கையிலும் நம்பிக்கை'' என்று பதில் கூறினர்.

''ஹிந்து மதத்திற்கும் மற்ற மதங்களுக்குமுள்ள ஒரு முக்கியமான வித்தியாசம் யாதெனில், மனிதன் குற்றத்திலிருந்து குணத்திற்குச் செல்கின்றதில்லை, மனிதன் உண்மையிலிருந்தே உண்மைக்குச் செல்கிறான், தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த உண்மைக்குச் செல்கிறான், என்று ஹிந்து மதம் கூறுகிறது. வேதங்கள் அபிவிருத்தியாகிற காட்சியினால் படிக்கப்படவேண்டும். மதமானது அத்வைத நிச்சயத்தில் முடிவுறுகிறவரையில் அதன் அபி விருத்தியின் சரித்திரம் முழுவதும் வேதங்களில் இருக்கின்றது. ஹிந்து மதத்தில் இதுவரையில் இல்லாததாக புதிய மத அறிவு ஒன்றும் இனிமேல் எக்காலத்தும் ஏற்படாது'' இவ் விஷயத்தை இன்னும் தெளிவாக விளக்கும்பொருட்டு, ஸ்வாமிகள் கூறியதாவது:—''எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாக ஒரு வஸ்து கண்டுபிடிக்கப்பட்ட பொழுது எப்படி ரசாயன சாஸ்திரத்தின் அபிவிருத்தி நின்றுபோகுமோ, எல்லாச் சக்திகளுக்கும் காரணமாக ஒரு சக்தி கண்டுபிடிக்கப்பட்ட பொழுது எப்படி ஜட சாஸ்திரத்தின் அபிவிருத்தி நின்றுபோகுமோ, அப்படியே ஏகேச்வரம் கண்டு பிடிக்கப்பட்டபொழுது மதத்தின் அபிவிருத்தியும் நின்று விடுகிறது; அப்படி தீர்மானமடைந்த மதம் ஹிந்து மதம்''

''ஸ்வாமிகளே, தங்களுடைய மதம் என்ன?'' வென்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு ஸ்வாமிகள் வெகு கம்பீரமாக ''நான் எந்தமதத்தைச் சேர்ந்தவனோ, அந்த மதத்திற்குக் கிறிஸ்

தவமதம் ஒரு கிளையும் புத்தமதம் ஒரு கலகக் குழந்தையுமாகும்" என்று மொழிந்தார். இப்படிக் கூறிவிட்டு, அவர் ஹிந்துக்களுக்கும் மற்ற ஜன சமுகங்களுக்குமுள்ள வித்தியாசங்களை யெடுத்துக் காட்ட ஆரம்பித்தார். "உலகத்தில் இரண்டுவித அபி விருத்திகள் உண்டாயிருந்திருக்கின்றன. ஒன்று, ராஜரீக சம்பந்தமான அபி விருத்தி; மற்றது, மதாபிவிருத்தி, ராஜரீக சம்பந்தமான அபிவிருத்தியில் கிரேக்கர்கள் மூதன்மை பெற்றனர்; தற்கால ராஜரீக ஸ்தாபனங்களெல்லாம் கிரேக்கர்களுடைய கொள்கைகளின் அபி விருத்தியே. மதாபி விருத்தியில் ஹிந்துக்கள் முதன்மை பெற்றனர். ஹிந்துக்களுடைய அதி சீக்கிரமதாபிவிருத்தியும் எல்லாவற்றிலும் அதி நுட்பப்பொருளைக் கிரகிக்கும் அவர்களுடைய சாமர்த்திய ஸ்வபாவமும் அவர்கள் எப்பொழுதும் உயர்ந்த லட்சியங்களையுடையவர்களாயிருப்பதற்குக் காரணங்களாயிருக்கின்றன. ஹிந்துக்களுடைய தற்கால நிலைமைக்கும் இவையே காரணம். ஹிந்துக்கள் மேனாட்டாரிடமிருந்து சிறிது மிருகத்தன்மையைக் கற்றுக்கொண்டு அவர்களுக்குச் சிறிது மானிடத்தன்மையைப் போதிப்பதற்குக் காலம் வந்திருக்கிறது."

"ஹிந்துவினுடைய தற்கால மதம் "தொடாதே" யென்பதும் உதாசீனதையும் ஹிந்து மதத்தை ஆராய்ச்சிசெய்யும் மேனாட்டு மாணவர்களுடைய அரை குறையான போதனைகளைப் பின்பற்றி ஜன சமூக விஷயத்தில் மாத்திரமன்று, மத விஷயத்திலும் கூட மேனாட்டாரைப்போல நடக்க முயற்சி செய்தலுமேயாம்." கடைசியில் ஸ்வாமிகள் பின்வரும் வார்த்தைகளினால் எச்சரிக்கை செய்து சம்பாஷணையை முடித்தார்:—"அவசியமாயின், உங்களுடைய ஜன சமூக வழக்கங்களை விருத்திசெய்து கொள்ளுங்கள், உங்களுடைய விதவைகளுக்கெல்லாம் விவாகம் செய்துவையுங்கள், ஜாதி ஸ்தாபனத்தினால் இனி பயனில்லை யென்றால் அதைத் தொலைத்து விடுங்கள்; ஆனால் மதத்தைவிட்டு விடாதீர்கள். ஒருவன் ஜன சமூக விஷயங்களில் யுக்தி வாதியாயிருக்கலாம். ஆனால் மத விஷயத்தில் வைதிகனாகத்தான் இருக்கவேண்டும்.

கடவுள்.

"ஓ உயிர்களே! எழுந்திருங்கள். அஞ்ஞான தூக்கத்தைவிட்டு விழித்துக்கொள்ளுங்கள். பிரஹ்ம நிஷ்டராகிய சிறந்த ஆசாரியரிடத்துக்குச் சென்று ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். விவேகிகள், இந்த வழியைத் தீட்டப்பட்ட கத்தி முனையைப்போலச் செல்வதற் கரிதானதால், நடப்பதற்குக் கடினமானதென்று உரைக்கின்றனர்" (கடோபநிஷத்து)

"யார் ஞான ஒளியையே வடிவாக உடையவரோ, யார் அணுவிலும் அதி சூக்ஷ்மமானவரோ, யாரிடத்தில் உலகங்களும் உலகத்தவரும் நிலைப் படுத்தப்பட்டிருக்கின்றனரோ, அவரே சத்ய ஸ்வரூபி, அவரே அழிவற்றவர், அவரே ஞானத்தினால் அறியப்படத்தக்கவர். ஓ பிரிய சிஷ்யனே! நீ யவரை ஞானத்தினால் அறியக்கடவாய்". (முண்டகோபநிஷத்து)

"கடவுள் ஒருவர், எல்லாப் பூதங்களிலுமறைந் திருப்பவர். யாவற்றிலும் நிறைந்திருப்பவர். எல்லாப் பூதங்களிலும் உள்ளே யிருப்பவர். சகல செய்கைகளுக்குந் தலைவர். எல்லாப் பூதங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர். யாவற்றிற்கும் சாக்ஷியாக இருப்பவர். ஞானஸ்வரூபி. சங்கராஹிதர் படைக்கப்பட்ட பொருள்களுடைய பண்புகழற்றவர்". (சுவேதாசுவதர உபநிஷத்து)

"ப்ரஹ்மத்தின் பெயர் ஆகாயம், அவர் பெயரும் உருவமுமுள்ள பொருள் களினுடைய நிர்வாகர், பெயரும் உருவமுமுள்ள பொருள்களைக் காட்டிலும் வேறானவர். அவர் ப்ரஹ்மம். அவர் அழிவற்றவர்". (சாந்தோக்யம்)

"எதனிடத்திலிருந்து (சிதசிதாத்மகாகிய) பொருள்கள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனால் நிலைபெற்றிருக்கின்றனவோ, (முடிவில்) எதை நோக்கிச்சென்று அடைகின்றனவோ அதை விசேஷமாய் அறிய விரும்புங்கள், அது ப்ரஹ்மம்". (தைத்திரிய உபநிஷத்து)

"யார் ஞானேந்திரியங்களுக்கு விஷயரோ, கர்மேந்திரியங்களுக் கதீதரோ, பிறப்பற்றவரோ, வருணமற்றவரோ, கண்காதுகளில்லாதவரோ அந்தக் கைகால்களற்றவரும், என்றுமுள்ளவரும், எங்குமுள்ளவரும், யாவற்றிலுமுள்ளவரும், அதி சூக்ஷ்மமான தன்மை யுடையவரும், அழிவற்றவரும், எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமுமானவரை, விவேகிகள் எங்கும் பார்க்கின்றனர்'. (முண்டகோபநிஷத்து)

கைத்தொழில் பகுதி

கறுப்பு மை.

எட்டுபாகம் மாசிக்காயும் மூன்றுபாகம் அன்னபேதியும் ஒருபாகம் கருவாப்பிசினும் சேர்த்து இடித்து இருபதுபாகம்தண்ணீர் சேர்த்து கொதிக்கவைத்து இறக்கிக் கொண்டால் எழுதுவதற்கு உபயோகமாயிருக்கும்.

ரோஸ் பவுடர்.

1 இராத்தல் ஆரோருட்மாவும் 5கிரெயின் ரோஸ் பவுடரும் ரோஸ் அத்தர் 10 துளியும், சந்தண அத்தர் 10 துளியும்விட்டு நன்றாய்க்கலக்கி சிறுபிள்ளைகளுக்கு சரீரத்தில் போடலாம். ரோஸ் அத்தருக்கு பதிலாய் ரோஸ் எசென்ஸ் நல்லது.

அரக்கு.

ஓர் செப்புப்பாத்திரத்தில் 5 பாகம் அவுலாக்கைப் போட்டு இளந் தீயில் உருக்கி மூன்றுபாகம் (டர்பெண்டைன்) கற்பூரதைலத்தைவிட்டு வேண்டியநிறம்போல் சாயபவுடரை சேர்த்து கலக்கி அதில் தூள்செய்த குங்குலியம் 6 பாகமும், சீமைசுண்ணாம்பு 4 பாகமும், சாம்பிராணி 2 பாகமும், இலைமாவு 4 பாகமும் சேர்த்து ஈயக்கரண்டியாலாகிலும் மரக்குச்சியினாலாகிலும் கிண்டி சரியான பதத்தில் எடுத்துவேண்டியமாதிரியாய் கழிகளாகவோ உருண்டையாகவோ செய்துக்கொள்ளவும்.

மஞ்சள் மெழுகு.

கொழுப்பு 30 பாகம், மஞ்சள் குங்கிலியம் 70 பாகம், மஞ்சள் தூள் 4 பாகம், மஞ்சள் பவுடர் 2 பாகம், இதுகளை ஒன்றாய்ச் சேர்த்து ஒருபெரிய பாத்திரத்தில் போட்டு உருக்கிக் கொள்ளவும். சுய மெழுகைவிட நன்றாயிருக்கும்.

ஜர்மன் சில்வர்.

செம்பு நாகம் நிக்கல் மூன்றையும் சமயிடையாய் எடுத்து செம்பையும் நிக்கலையும் துண்டு துண்டாக்கி குகையில்போட்டு உருக்கியபின்நாகத்தையும் அதில் போட்டு உருக்கி தேவையான சமான்கள் செய்து கொள்ளலாம் இது அசல் வெள்ளியைப் போலிருக்கும்.

பொது வர்த்தமானம்.

ஜெப்ளின் ஆகாயக்கப்பல்கள்.

ஜெப்ளின் என்ற ஒரு ஜெர்மன் பிரபுவால் கண்டு பிடிக்கப்பட்டுச் செய்யப்பட்ட ஜெப்ளின் ஆகாயகப்பல்கள் மிக பிரமாண்டமானவைகளென்று யாவரும் அறிவார்கள். ஒரு ஜெப்ளின் கப்பலில் 60 பேர் ஏறிப்போகக்கூடும். மேலும் ஏராளமான வெடிகுண்டுகளையும் ஒன்று இரண்டு பீரங்கிகளையும் முதலாய் அதில் ஏற்றிக்கொண்டு போகலாம். ஆகையால் ஜெப்ளின் ஆகாயகப்பல்களைக் கொண்டு சத்துருக்களுக்குப் பெருத்த நஷ்டங்களை உண்டாக்கிப் போடலாமென்று ஜெர்மானியர் நினைத்திருந்தார்கள். ஆயினும் அவர்கள் எண்ணியிருந்தது போல் அவ்வளவு பெரிய நஷ்டங்களை அக்கப்பல்களால் ஜெர்மானியர் செய்யக்கூடுமாயில்லை. ஜெர்மானியருடைய 130 ஜெப்ளின் கப்பல்களில் 30 கப்பல்கள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. 25 கப்பல்கள் நடுநிலைமை தேசங்களிலும், பால்டிக்கிலும், ஜெர்மனியிலும் காணாமற்போயின, அல்லது உதவியற்றவைகளாய்ப் போய்விட்டன. இப்போது ஜெர்மானியர் ஜெப்ளின் கப்பல்களைவிட இன்னும் அதிக பெரிய கப்பல்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளுக்குச் சூப்பெர் ஜெப்ளின்' என்று பேர் கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் அவைகள் சத்துருக்களுடைய குண்டுகளுக்குத் தப்பித்துக்கொள்ளக்கூடிய உயரத்திற்குப் பறக்கவேண்டுமென்றால் அவைகளிலிருக்கப்பட்ட எண்ணெயும் வெடிகுண்டுகளும் வெகுவாய்ச் செலவாக்கப்பட்டு அதனால் அவைகள் இலேசாக்கப்பட்டால் மாத்திரம் உயரத்தில் பறக்கக்கூடுமாயிருக்குமென்று பிராஞ்சு ஆகாயக்கப்பல் கட்டடக்காரராகிய முசியே முல்லியோ சொல்லுகிறார். ஆகையால் ஜெர்மானியர் சாதாரண ஜெப்ளின் கப்பல்களால் தங்களுடைய சத்துருக்களுக்குச் செய்யும் தின்மையைவிட இந்தச்சூப்பெர் ஜெப்ளின்களால் அதிகம் செய்யமுடியாதென்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

போராடும் இராஜகுமாரத்தி.

கீழ்த்திசைப் போர்களத்தில் வெல்ஹினியா சண்டையில் காயப்பட்டு, இப்போது கர்க்கோப் பட்டனத்தின் மிலிட்டரி ஆஸ்பத்

திரியில் இருக்கும் ஓர் ருஷிய போர்வீரன் யாரென்று விசாரித்துப் பார்த்ததில் அந்தப் போர்வீரன் ஆண்பிள்ளையல்ல, ஓர் ஸ்திரீயானவளென்றும், அந்த ஸ்திரீ வொலோன்ஸ்கியென்ற இராஜகுமாரத்தியென்றும் தெரியவருகிறது. அவள் இருபத்திரண்டு வயதுள்ள யௌவன மாது. அவளுடைய சரித்திரம் அற்புதமாயும் உருக்கமாயும் இருக்கிறது. அவளுடைய புருஷன் பிரின்ஸ் வொலோன்ஸ்கியென்ற இராஜகுமாரன் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மானியரால் கொல்லப்பட்டான். அவன் செத்துச் சிறிது காலத்திற்குப் பிறகு வொலோன்ஸ் கியம்மாளின் தந்தையும் சகோதரர்களும் சண்டையில் மடிந்தார்கள். அதன்மேல் அவளுக்குப் பெருந் துயாமுண்டானது. தனது நாயகனுடையவும் உறவினருடையவும் மாணத்திற்காக சத்துருக்களைப் பழிவாங்கவேண்டுமென்று தீர்மானித்து ருஷிய இராணுவத்தில் வாலண்டியராக நுழைந்தாள். தன் நீண்ட கூந்தலைக்கத்தரித்துப் போட்டு, ஆணுடை தரித்துக் கொண்டு சாதாரண போர்ச்சேவகனாகப் பட்டாளத்தில் பேர் எழுதிக்கொண்டாள். தென்மேற்கு போர்முகத்தில் அவள் சண்டை போட்டுக்கொண்டிருந்தபோது பல மாதங்களுக்குப் பிறகுமாத்திரம் அவள் ஸ்திரீயெனத் தெரியவந்தது. அதன்மேல் அவளை இராணுவத்திலிருந்து நீக்கிப்போடும் படியாக இராணுவத் தலைவரால் கியெப்பட்டணத்திற்கு அனுப்பப்பட்டாள் ஆயினும் அந்தப் பயணத்தில் அந்தத் தைரியசாலியான இராஜகுமாரத்தி தன் காவற்காரரிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டோடிப் போய் பழையபடி போர்முனைக்குத் திரும்பி வந்து போராடிக் கொண்டிருக்கையில்தான் அவள் கனமான காயம்பட்டாள். அதன்மேல் அவள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாள். ருஷிய இராணுவத்தில் சண்டைபோட்ட பெண் இந்த இராஜகுமாரத்திமாத்திரமல்ல, இன்னும் வேறு சில ஸ்திரீகளும் வெவ்வேறு இடங்களில் ஆண் வேஷத்துடன் சண்டைபோட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

* * *

மனிதன் எவ்வளவு பிரயாசைப்பட்டு தன் ஆசைகளையொழித்தாலும் மீண்டும் மீண்டும் அவைகள் மனதை விட்டகலாமல் தோன்றிக்கொண்டிருக்கும் இந்த ஆசைகளையடியோடு நீக்க விரும்பினால் ஞானத்தினால் அடியோடு நீக்கிவிடலாம்.

புத்தக வரவு.

மாமிகள் துயரம்
அல்லது
மருமக்கள் கொண்டாட்டம்

இஃது இனிய செந்தமிழில் மகா-ள-ள-ஸ்ரீ அ. ரா. மாதவராய முதலியாரவர்களால் எழுதப்பட்டுள்ளது. இச்சிறுபுத்தகத்தில் கல்வி நாகரீகம். பெற்ற மருமக்கள் செய்யும் செயல்களும் அவற்றைக் கண்டு சகியாது, படியாத மாமிகள் மருமக்களைத் தூற்றுவதும், அதனால் மாமிகள் அடையும கஷ்டநஷ்டங்களும், படியாததினல் பல வழியும் மாமிகள் அநுபவிக்கநேரும் கஷ்டங்களும் மிவகு தெளிவாய் எழுதப்பட்டு பெங்களூர் தண்டு. 21. ஒல்ட் புவர் அவுஸ் ரோட் எம். மாசிலாமணிமுதலியாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டணா ஸ்டாம்பு அனுப்பினல் ஒரு புஸ்தகம் அனுப்பப்படும். இதை அன்புகூர்ந்து எங்கள் பார்வைச்கு அனுப்பினதற்காக எங்கள் அன்பார்ந்தவந்தனம் அளிக்கிறோம்.

Review.

We are in receipt of the first issue of the INDIAN STORY -- TELLER published in Mysore by The Mysore Publishing House

It is the only Journal of this kind devoted to enlighten the vast hidden treasure of the Indian Literature in English by learned.

The annual subscription is Rs 2—0—0 only.

We heartly thank them for sending their journal to us for openion and exchange.

இனம் ! இனம் !!

அரையணா ஸ்டாம்பு அனுப்பினல் ஓர் இனிய தமிழ்நாவல் இனமாக அனுப்பப்படும்.

“அட்வர்டைஸர்“ ஆபீஸ், புதுவை.

பல கண்காட்சிகளில் மெடல்பெற்ற

பி. சுப்பராயின், ஆயுர்வேத ஔஷதங்கள்,

தாதுபுஷ்டி மருந்து.

இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுகஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை கண், கால் எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம். கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களைப் போக்கும். சரீர புஷ்டி புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரணசக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையுண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தை கெட்டிப்படுத்தி போக சக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூ. 2, வி. பி. சிலவு அணு 5 பிரத்தியேகம்.

அக்கினி மாந்தத்திற்கு மருந்து.

பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ் செரிச்சல், மலச்சிக்கல். வயற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும் பசிதீபனமும், தேகஆரோக்கியமும், தரும். டப்பா 1 க்கு அணு 8, வி பி சிலவு ஒன்று அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

பிரமேக நிவாரணி.

எந்தகாரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை; நீர்குற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1 க்கு விலைரூபா. 1 வி. பி. சிலவு ஒன்றுமுதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

சர்வநோய் சம்ஹாரன்.

இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால், கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய்; தலைநோய், கழுத்து நோய், பக்கசூலை, இடுப்பு நோய், சூதகவலி, பாரிசவாய்வு, மேகவாய்வு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களும் சீக்கிரத்தில் குணப்படும் சீசா 1 க்கு விலை ரூபா 1 வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்

பி. சுப்பராய்.

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி; தஞ்சாவூர்.

டாக்டர் பாட்லிவாலாவின் திவ்ய மருந்துகள்.

அசல் கொயினு 1 கிரெயின் 100 மாத்திரை புட்டி 1 - க்கு அணா 12 டிஃ2. கிரெயின் ரூபா 1. குளிர்ஜ்வர மிக்சரும் மாத்திரைகளும். கை கண்டமருந்துகள். புட்டி ரூ. 1.

தாதுவிருத்தி மாத்திரைகள் பலஹீனர்களுக்கும், தாதுபுஷ்டி இல்லாதவர்களுக்கும், காசரோகம், அஜீரணம் உள்ளவர்களுக்கும் திவ்யமான மருந்து. புட்டி ஒன்றுக்கு ரூ- 1-8-0. பல்பொடி சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டது. வாய் நாற்றத்தைப்போக்கும் புட்டி ஒன்றுக்கு 4 அணா கடிமருந்து ஒரு நாளில் கடியை நிவர்த்திக்கும். புட்டி ஒன்றுக்கு 4 அணா எங்கும் கிடைக்கும். கிடைக்காவிட்டால் பம்பாயில் டாடாரி டாக்டர் பாட்லிவாலாஸன்ஸ் & கம்பெனிக்கு எழுதவும்

Dr H. L. Batliwalla Sons & Co., Ltd.

Warli Laboratory, Dadar. 18, BOMBAY.

SPIRITUAL MIRROR

If you wish to test the supernatural power and to ascertain the results of law suits and examinations and aloo about diseases if yon want to search for your lost or stolen property and to see the culprit if you wish to see your dead and departed ones and thereby console yourself if you long to know what incompre-hensive feelings are overwelming your thoughts and mind if you want to see any saint, whether you are a Hindu, Buddhist, Christian, Mohamedan or of any other religionist, are anxious to know the subtle and secret philosophy of your religion, then use this miraculous SPIRITUAL MIRROR. It is sure to satisfy your desires. Try only once and you will be convinced of the facą

Price Re 1 - 0 - 0 Packing and postage annas SIX extra.

Address :— RANJAU

4. Kartick Bose Lane, CALCUTTA.

N. B. All correspondence (with full and legible address) should be in English only.

அனுபவமானது! அருமையானது!!

மன்மதவீரியம்.

இந்த லேகியத்தை உபயோகிப்பதினால் நரம்புத்தளர்ச்சி சப்தாதுக்களின் பலக்குறைவு, மூலச்சூடு, இடுப்பு வலி, திரேக அசதி நித்திரைபங்கம் முதலியவைகளை நீக்கி இரத்தத்தை சுத்தி செய்து அதிகரிக்கச்செய்யும். நீறுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, உடம்பை வலுவுபடுத்தி, சந்தோஷத்தையும், தைரியத்தையும், சரீரகாந்தியையும் உண்டாக்கும். மூத்திரத்தில் எரிவதையும் சத்துவம் போவதையும் நிறுத்திவிடும்.

விலை டப்பி 1-க்கு ரூ 2—0—0 வி பி. செலவு பிரத்தியேகம்.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனாம்.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

பி. எஸ் ராய்
புதுவை.

வன்னிகுல மித்திரன்.

சேரசோழ பாண்டிய பல்லவ அரசர்களின் சரிதங்கள், அவர்களாட்சியிலேற்பட்ட கல்வெட்டு. சிலாசாசநங்கள் குலாசாரம் சீர்திருத்தம் கல்வி கைத்தொழில் ஆங்காங்கு நடக்கும் பல சங்கங்களின் வர்த்தமானங்கள் பலதேச பொது வர்த்தமானங்களுடன் வன்னிகுல க்ஷத்ரியரின் அபிவிருத்தியைக் கோறி நடைபெற்று வரும் ஓர் மாதாந்தரப்பத்திரிகை.

உள்ளூர் வெளியூர் களுக்கு வருடசந்தா ரூ 1—0—0

பினாங்கு சிங்கப்பூர் ரெட்டால் முதலியபிரதேசங்களுக்கு வருஷசந்தா ரூ 1—8—0

அரச வமிசத்தினர் பேரில் மகா கவியாகிய கம்பர் பாடிய சிலையெழுபது மூலமும் உரையும் புஸ்தகம் 1 க்கு. 0—6—0

மானேஜர்
“ வன்னிகுல மித்திரன்“ ஆபீஸ்
பேரம்பூர் பாரக்ஸ், மதராஸ்

தேவையா ? தேவையா ?

இதுகாறும் வைத்தியசாலை வைத்திருப்போருக்கும் இனி புதிதாக நேமிக்க உத்தேசமுள்ளோர்க்கும் அறிவிப்பு: அப்பேற்பட்ட அவிழ்தசாலைகளில் இருந்து பஸ்ப சுன்ன செந்தூர லேகியம் மாத்திரை தைல முதலிய மருந்துகள் செய்து கொடுக்கவும் வருகிற கேசுகளைப்பார்த்து குணப்படுத்துவதற்கும், இன்னும் மிருகசாதிகளுக்கு வரும் நோய்களுக்கு வைத்தியம் செய்யவும் ஓர் வைத்தியர் தேவையானால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

குஷ்ட ரோகத்திற்கு

காங்கேய ரெண்ணெய்.

இதன் குணத்தை எழுதமுடியாது அனுபோகத்தில் அறியலாகும் பண்டலம் சாப்பிடக்கூடிய எண்ணை கிரயம் ரூ 15-0-0

பூபதிமாத்திரை.

நெடுநாள் வெட்டை ஆறாத குழிப்புண் பறங்கிபுண் நுணைக்காய்கிரந்தி நாசிப்புத்து யோனிபுத்து லிங்கப்புத்து இவைகள் தீரும். 10 நாள் மருந்தின் கிரயம் ரூ. 5-0-0

ஆத்ம நேசன்.

100 மாத்திரை ரூ 1

இதை காலை மாலையில் 5, 6 சாப்பிட்டு வென்னீர் அருந்த பித்த மயக்கத்தையும் பித்தவாய்வையும் கண்டிக்கும். காசரோகமும் குன்மரோகமும் சௌக்கியப்படும் குழந்தைகளுக்கு காணும் படியான கக்குவான் குடித்த பாலைகக்குதல் சுரம் வலிப்பு இவைதீரும் பிரசவிக்கக் கஷ்டப்படும் பெண்களுக்கு 10 மாத்திரை அறைதிரும் அருக்கு சாறுபத்திற் கொடுக்க சுகமுடன் பிரசவிப்பர் அழுக்குச்சிக்கலை துப்பற வெளியாக்கும். சன்னிகளையும் கண்டிக்கும். தயவுசெய்து ஒருமுறை அனுபவித்துப் பாருங்கள்.

விலாசம்:—

எஸ். முனிசாமி வைத்தியர்,

ஜெகநாதம் பிரஸ்,

புதுவை.

இலங்கை கறுப்புக் குளிகை.

இக்குளிகையை பாவிப்பதால் வயிற்றிலுள்ள மந்தம், அஜீரணம் முதலிய தார் அழுக்குகளை நீக்குவதுமன்றி வயிற்றுவலி, வயிறூதல், பசியின்மை, மலச்சிக்கல் சுரக்குணம், அண்டவாதம், கைகால் உளைவு, இடுப்புவலி சரீர உலைவு, பல்வலி, மூரசு கரைதல் காது ரோகம், கக்கூசப்பற்று, வாய்நாற்றம், முகப்பரு, தலையிடி, ஒடுவாய்வு, வாங்கி, குஷ்டம், தளிசனைப்பற்று, சொறி, தேகவமைச்சல், வயிறு உகிரரோகம் பாண்டுரோகம், தூக்கமின்மை, சரீரவீக்கம்; நரம்பு பெலகின்மை, மூலரோகம், மீனிசரோகம், காட்டுக்காச்சல் முதலிய சரீரத்திலுள்ள அநேக இரத்தம் அசடான ரோகங்களைநீக்கி தேகபுஷ்டியைக் கொடுக்கும் சிலர் ஒரு மருந்தில் இவ்வளவுகுணம் உண்டாகுமாவென்று சிந்திக்கிறார்கள் ஒருமுறை பாவித்தால் அதன் ஆச்சரியமான குணம் விளங்குவதுடன் மனதிருப்தியுண்டாகத் தடையில்லை ஜாயங்கே விவிகா ரோகாக் பிறபஸ் லோமல் சஞ்சபாத் (இ-ள்) வயிற்றில் மலமாகிய தார் அழுக்கு நிறைந்திருப்பதால் அநேக ரோகங்கள் சரீரத்தில் உண்டாகுமென்று ஆயுர்வேதமேற்குட்டும் சுலோகம் கூறுகிறது பாவிக்கும் விதம் இரவு சாப்பிட்டு அரைமணிக்குப்பின் ஒரு குளிகையை விழுங்கி ஆறியசுடுதண்ணீர் குடிக்கப்படுக்க காலையில் இலகுவாய் ஒருதரம் அல்லது இரண்டுதரம் மலம் கழியும், பத்தியமில்லை. ஆண்களும் பெண்களும் பாவித்து குணமடைந்த அருமையான குளிகை. இக்குளிகையை கர்ப்பஸ்திரீகளும் சிறுபிள்ளைகளும் பாவிக்கலாகாது இதைப்போலுள்ள மற்ற குளிகைகளுக்கு இது இரண்டாவதல்ல இக்குளிகையின் மேன்மையான குணத்தைப்பற்றி இலங்கைமாநகரத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளின் பத்திராதிபர்களும் இலங்கை கனதனவான்களும் அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் எமக்களித்திருக்கிறார்கள

(25) குளிகை அடங்கிய பெட்டி 1-க்கு ரூபா 1. [12] குளிகை அடங்கிய பெட்டி 1 -க்கு 50. சதம் [5] குளிகை அடங்கியதற்கு சதம் 25 தபால் செலவு சதம் 10 இந்தியாவுக்கு தபால்செலவு அணா 4

கொழும்பு புறக்கோட்டை ஆசிருப்பள்ளிதெரு 26-ம் நெம்பர் ஸ்ரீ லங்கா மருந்துச்சாலையில் வைத்தியர் எஸ். எச். பி. த. சில்வா அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இக்குளிகையை கமிஷனுக்கு மொத்தமாய் எடுத்துவிற்க வியாபாரிகள் தேவை சகல இரகசியமான வியாதிகளுக்கும் மருந்து எப்பொழுதும் தயாராயிருக்கிறது

☞ சரீரத்துக்கு அவகுணமுடைய விஷ மருந்துகள் ஒன்றும் இக்குளிகைக்கு சேர்க்கப்படவில்லை.